ISSN : 2456-821X **அவையம் 2 (1)** 2018 P.No. : 22-29

புதிய அவையம்

SACRED HEART RESEARCH PUBLICATIONS

---

## செந்தமிழ்ச்செல்வி இதழின் புதுக்கவிதைகளின் சிறப்பியல்புகள்

***முனைவர் ஆ. மரிய தனபால்***
*உதவிப்பேராசிரியர்*
*தமிழாய்வுத்துறை*
*தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி*
*திருச்சிராப்பள்ளி – 620 002.*

**கட்டுரை பெறப்பட்டது : 15.04.2018** **ஏற்கப்பட்டது : 03.05.2018**

---

*முன்னுரை*

*அறிவியல் உலகின் வளர்ச்சியில் இன்றைய இலக்கியங்களின் நோக்கும் போக்கும் எதிர்கால முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் வகையில் அமைகின்றன. புராணம், காப்பியம் மற்;றும் பிரபந்த மரபிலிருந்து மேற்கத்திய நாட்டுத்தாக்கத்தின் காரணமாகத் தமிழில் நவீனவகை இலக்கியங்கள் தோன்றின. கவிதை, சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை என்னும் ஐந்தும் இருபதாம் நூற்றாண்டின் ஏற்றமிகு இலக்கிய வகையாகும். இலக்கிய வளர்ச்சிக்கு பலத்துறைகள் பங்காற்றி இருந்தாலும், அதில் இதழியல் துறைக்கு முக்கியப்பங்குண்டு. தனித்தமிழ்த்தந்தை மறைமலையடிகளாரின் கொள்கைகளைப் பரப்புவதற்காகச் செந்தமிழ்ச்செல்வி என்ற இலக்கியத் திங்கள் ஏட்டினை வ.சுப்பையா பிள்ளை 1923-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பெற்றது. தமிழ்மொழி வளர்ச்சிக்கு பல்வேறு நிலைகளில் இவ்விதழ்*

புதிய அவையம்

பங்காற்றியது. அவ்வகையில், செந்தமிழ்ச்செல்வி இதழில் வெளிவந்த புதுக்கவிதைப் படைப்பாளர்களின் எண்ணப்பதிவுகளை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**கிராமச்சூழல் மாற்றமடைந்த நிலை**

இயற்கையை நேசித்து வாழ்ந்த மனிதன், எல்லா வளங்களையும் பெற்று இன்பமாய் வாழ்ந்தான். தற்பொழுது நாகரிகம் என்ற பெயரில் அவன் அடைந்த வளர்ச்சி நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐம்பூதங்களையும் அலட்சியப்படுத்தி வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான். கிராமங்கள் என்றாலே மரம், செடி, கொடியுடன் கூடிய பசுமைக்குள் பொதிந்து கிடக்கும் காட்சிகள்தான் மனதில் தோன்றும். ஆனால், இன்று மக்களின் தாகந்தீர்க்கும் நீரும், மரங்களின் வளர்ச்சியைக் காக்கும் நீரும் பூமிக்கடியில் இல்லை. புறச்சூழலின் வெப்பம் தாங்காமல், மக்கள் மட்டும் அல்லாமல் பறவைகளும் பொலிவிழந்திருக்கும் நிலையில்தான் பெரும்பாலான கிராமங்கள் உள்ளன.

*“கொல்லைகளும் தோப்புகளும் தூய காற்றும்*

*கொஞ்சி நின்ற குயில்குரலும் வெறுமையாகி*

*எல்லாமும் போயின்று கிராம மென்னும்*

*எழிலழிந்து நகரமாக மாறிற் றந்தோ”1*

என்று இயற்கையழகும், வளமும் இல்லாத கிராமச்சூழலின் நிலையை வேதனையுடன் கருமலைத் தமிழாழன் குறிப்பிடுகிறார்.

**மனிதநேயத்தின் நிலை**

புதிய அலைவெம்

போட்டி நிறைந்த வாழ்க்கையில் ஒவ்வொருவரும் மனிதநேயம் என்பதை மறந்து இயந்திரமாக வாழும் நிலையில் உள்ளனர். விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் உள்ள இடைவெளியானது இல்லாமல் போயிற்று. மனிதர்களுக்கு இருக்க வேண்டிய குணங்கள் நாகரிக வளர்ச்சியால் மடிந்து போய்விட்டதைக் கருமலைத் தமிழாழன்,

*“வாஞ்சையுடன் மனிதநேயம் வளர்ந்திருந்த*

*வளமான குடும்பங்கள் மறைந்து போக*

*வாய் திறந்து பேசுவதற்கும் கூலிகேட்கும்*

*மாய்ந்திட்ட மனிதமுடன் முகங்கள் இல்லா*

*மாடிகளாய் நகரங்கள் வளர்ந்த தந்தோ”2*

என்று நாகரிகம் என்கிற போக்கில் முகங்கொடுத்து பேசுவதற்குக்கூடத் தயங்கும் நிலை ஏற்பட்டுள்ளதை எடுத்துரைக்கிறார்.

**மரங்களை முன்னோர் பேணிய விதம்**

ஆதிகால மனிதன் தன்னுடைய சக்திக்கு மீறிய இயற்கையை வணங்கினான். தனக்கு உணவும், நிழலும், நோய் தீர்க்கும் சக்தியும் கொடுத்த மரங்களை வழிபட்டான். ஆகையால்தான், “பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரர், கிருஷ்ணன், லட்சுமி, குபேரன் இவர்களுக்கு ஆலமரமும், ராமன், நாராயணன் இவர்களுக்குத் துளசியும், சிவன், துர்கை, சூரியன் இவர்களுக்கு வில்வமரமும், கோவிந்தனுக்கு மாமரமும், வனதுர்கனுக்கு அரசமரமும், புத்தர், இந்திரன் இவர்களுக்கு அசோக மரமும் என ஒவ்வொரு கடவுளுக்குத் தலவிருட்சங்களாக பல்வேறு மரங்களை ஒதுக்கப்பட்டுள்ளதை அதர்வண வேதம் குறிப்பிடுவதாக”3 சு. இன்னாசிமுத்து எடுத்துரைக்கிறார். கடவுளுக்கு நிகரான மரங்களை வளர்ப்பதும் இல்லை



பதிப்பு இதழ்

வணங்குவதும் இல்லை. மனிதனுடைய சுயநலம் சகமனிதனுக்கு மட்டும் தீங்கு விளைவிப்பதோடு மட்டுமன்றி, பறவையினங்களுக்கும் விளைவிக்கும் இன்னலை,

*"காலையிலே குஞ்சுகளை விட்டுச்சென்று*

*கதிர் மறைய இரையோடு வந்தபோது*

*காலையிலே இருந்தமரம் காணவில்லை*

*காணாமல் போனதி;ங்கே மனிதத் தன்மை"4*

என்று கருமலைத் தமிழாழன் எடுத்துரைக்கிறார்.

**சமயச்சார்பின்மை**

இந்தியா சமயச்சார்பற்ற குடியரசு நாடாகும். பல சமயங்களைத் தன்னகத்தே கொண்ட கூட்டுச் சமயச்சார்பைப் பின்பற்றக் கூடியதாகும். கி.பி.1886-ஆம் ஆண்டு தமிழகத்திற்குச் சமயச்சார்பின்மை என்னும் சொல் அறிமுகமானது. அப்போது, சென்னையில் பல ஐரோப்பியர் சமயம் சாராதவராக வாழ்ந்து வந்தனர். அவர்களில் அப்ஷன்துரை என்பவர் மதராஸ் செக்யுலர் சொசைட்டி (ஆயனசயள ளநஉரடயச ளழஉநைவல) என்ற சபையை நிறுவினார். அது முதற்கொண்டு தமிழகத்தில் செக்யூலரிசம் என்ற சொல்லாட்சி வழக்கிற்கு வந்தது. வாழ்க்கை நியதிகள் வேறு, சமயக்கொள்கைகள் வேறு என்றில்லாமல், வாழ்வியலைச் சமயத்தோடு பின்னிப்பிணைத்துக் காணுவது பாரத நாடாகும். எனவேதான், பாரதியார் நம் நாட்டினை ஞானத்தில் உயர்ந்த நாடாகக் கண்டார். மனிதகுல நலனுக்காகதான் மதம், மதத்தின் நலனுக்காக மனிதன் தன்னை அழித்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. உண்மை ஒன்றுதான் அது பல வடிவங்களில் பார்க்கப்படுகிறது. மூடக்கட்டுகளின் தாக்கம் மக்களிடம் இன்னும் உயிர்பெற்று இருப்பதால்தான் அன்பு, கருணை, இரக்கம் ஆகியவையெல்லாம் அறவே ஒழிந்தன. இதன்விளைவு மனிதர்களிடையே சமயச்சண்டை தலைதூக்கி நிற்கின்றது. இக்கொடுமையை,



பதிப்பகம் இணையம்

*"அழிந்தது மசூதி அன்று*

*அகிலமும் ஒருங்கு நம்மைப்*

*பழித்திடும் பாவம் செய்தீர்*

*பாவிகாள்*

*களங்கத்தைக் கழுவுவதற்குக்*

*கங்கையும் போதுமோ"5*

*என்று பாபர் மசூதியை (06.12.1992) இடித்தது சாதாரணச் செயலன்று, அது எல்லாப் பழியையும் விஞ்சி நிற்கும் செயலாகும். இக்களங்கத்தைக் கழுவுதற்குக் கங்கை நீரும் போதாது என்று குலோத்துங்கன் வினவுகிறார்.*

**சாதிபேதம் கடிதல்**

*சாதி தமிழகத்திலிருந்து எக்காலத்திலும் ஒழிக்க முடியாத வகையில் மக்;களிடம் வேரூன்றிவிட்டது. சமுதாயம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மனித இனத்தவர் தங்கள் தேவைகளை நிறைவு செய்துகொள்ள ஏற்படுத்திக்கொண்ட ஒரு கூட்டமைப்பாகும். இந்தியச் சமூகம் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டுள்ளது. மேலைநாட்டைப் போல் வகுப்புச் சமூகமாக (ஊடயளள ளுழஉநைவல) அமையாமல், சாதிச் சமூகமாக (ஊயளவந ளுழஉநைவல) அமைந்திருக்கிறது. இலக்கியப் படைப்பாளிகள் காலந்தோறும் சாதிக்கொடுமையை எதிர்த்துக்குரல் எழுப்;பிக்கொண்டு இருக்கின்றனர். எனினும் சாதி ஒழிந்த பாடில்லை என்பதை,*

*"மதமும், கடவுளும் மாந்தர்க்குள்ளே*

*சாதிகளையும் பேதங்களையும்*



பதிப்பு அவையம்

*படைக்கலை மாந்தனே படைத்தான்"6*

*என்று மு.துரைசாமி குறிப்பிடுகிறார். சாதி ஒழிப்பு இயக்கத்திற்குக் குறைந்தது 2,600 ஆண்டு வரலாறு உண்டு. எந்தப் போராட்டமும் இவ்வளவு நீண்ட நாள் நடந்தது கிடையாது என்று வா.செ.குழந்தைசாமி குறிப்பிடுவதிலிருந்து சாதியின் நிலைப்புத்தன்மையை அறியமுடியும்.*

***சாதியும் அரசியலும்***

*சங்ககால இறுதியில் நான்கு வருணப்பிரிவுகளை அந்தணர்கள் ஏற்படுத்தியதைத் தமிழ் நாகரிகம் ஏற்றுக்கொண்டது. தென்னகத்திற்கு வந்துசேர்ந்த அந்தணரால்தான் தமிழகத்தில் சாதிமுறையின் தோற்றம் ஏற்பட்டது. விஜயாலயன் வழிவந்த சோழ அரசர்களுக்குள் மாமன்னன் இராசராசன் இச்சாதிமுறையின் மூலப்பிடிமானங்களை ஸ்தாபன முறையில் தமிழ் நாகரிகத்திற்குரியனவாக நிலைப்படுத்தினான் என்று க.ப.அறவாணன் குறிப்பிடுவர். திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவி என்னும் இடத்தில் வ.வே.சு தமிழ்க்குருகுல வித்தியாலயம் ஒன்றைத் தமிழ்நாடு காங்கிரசின் பண உதவியுடன் நடத்தினார்.*

*அக்குருகுலத்தின் நோக்கமாகத் தமிழ்மொழியை வளர்ப்பதும், தமிழக இளைஞர்களைச் சீக்கியர்கள்போல் வீரர்களாக மாற்றுவதுமாகும் எனக் குறிப்பிடப்பட்டது. அனைவருக்கும் குருகுலத்தில் படிப்பதற்கு இடங்கொடுத்தாலும், பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதவர்கள் என இருவகையினராகப் பிரிக்கப்பட்டனர். தனித்தனியாக உணவும், தண்ணீர்ப்பானையும் வைக்கப்பட்டது. இது வருணாசிரமப்படி மாணவர்களிடையே உயர்வு தாழ்வு காட்டப்படும் செயலென்று கருதுவதற்கு இடங்கொடுத்தது. இப்பிரச்சினைகளுக்கு உண்மையான தேசியவாதியாக விளங்கிய வ.வே.சு பெற்றோர்களின் விருப்பத்திற்கு மதிப்பளிக்க வேண்டுமென்று இருவேறு பிரிவாகப் பிரிக்க நேர்ந்தது என்று பதிலளித்தார்.*

*"சாதியை விடுத்த தமிழர் யாரடா?*



பதிப்பு இணையம்

*வேதியர் சாதியை விடுப்பினும், அரசியல்*

*வாதியர் சாதியை வரமெனத் தாங்குவர்*

*சாதியை வைத்துத் தலைவர் வாழுவர்*

*சாதிகள் என்றடா தமிழகத் தொழிவது.”7*

என்று ஏக்கத்துடன் குலோத்துங்கன் குறிப்பிடுகிறார். தலைசிறந்த மனிதர்களையும் சாதி என்கிற ஒன்று தலைதடுமாற செய்துவிடும்.

**தமிழ்மொழியின் இன்றியமையாமை**

உலகில் மிகத்தொன்மை வாய்ந்த இனமாகத் தமிழினம் விளங்குகிறது. வரலாற்று நிலநூல் ஆராய்ச்சி அடிப்படையிலும் மாந்தன் தோன்றிய இடம் குமரிக்கண்டம் என்பது சான்றோர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். ஆனால், சமஸ்கிருதம் எக்காலத்திலும் மக்களின் பேச்சுமொழியாக இருந்தது இல்லை. அத்துடன் சமஸ்கிருதம் இயற்கையான மொழியில்லை. படித்தவர்களாலும், அந்தணர்களாலும் மட்டுமே பேசப்பட்ட மொழியாகும்.

*“ஒன்றுக்கும் உதவாத மொழிகள் எல்லாம்*

*உயரத்தே போகவழி தேடும் போதில்*

*என்றுதித்த தென்றறியாப் பருவத் தன்னில்*

*இயல்பாகத் தோன்றிட்ட தமிழ் வளர்க்க*

*நற்றமிழின் நலங்காக்க முனைய வேண்டும்.”8*



பதிப்பு இணையம்

என்று தமிழ்மொழியின் சிறப்பையும், சமஸ்கிருதத்தின் சிறப்பையும் எடுத்துரைத்து தொன்மையானத் தமிழ்மொழியை வளர்க்க தமிழர்கள் முயலவேண்டுமென சண்முகம் எடுத்துரைக்கிறார். தமிழ்வேந்தர்கள், சமயச்சார்பற்ற முறையில் தமிழர் என்ற இனஉணர்வோடு ஆட்சிபுரிந்த காலம்வரை தமிழ்மொழி சிறப்புடனும், செல்வாக்குடனும் உரிமை வாழ்வு நடத்தியது. இதற்குமாறாக, தமிழக அரசர்கள் சமயச்சார்புடையவர்களான பின்னர் தமிழ்மொழியின் வாழ்வு தேய்பிறையாகி, தமிழகத்தில் சமஸ்கிருத்தின் செல்வாக்கு வரம்புமீறி வளர்ந்தது. “தமிழ் என்றைக்குச் சமயத்தில் போய் புகுந்ததோ, சமயத்துக்காரன் எப்போது தமிழ் கதவைத் திறந்தது, இறந்தவனை எழுப்பியது என்று சமயத்தில் கொண்டுபோய்ப் புகுத்தினானோ அன்றே தமிழும் முன்னேற முடியாமல் கெட்டுப்போய்விட்டது. மதம் தமிழைக் கெடுத்தது,”9 என்று தந்தை பெரியார் குறிப்பிட்டார்.

முடிவுரை

செந்தமிழ்ச்செல்வி இதழ் புதுக்கவிதைகளின் மூலம் சமுதாயத்தில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் நயமாக எடுத்துரைத்த சாதனமாகும். அதன் அடிப்படையில் சுற்றுச்சூழல், சமயம், சாதி, அரசியல், மொழி ஆகியவற்றினால் ஏற்படும் இடர்பாடுகளை எடுத்துரைத்துள்ளது. இதழ் என்கிற விதத்தில் அறிவுறுத்தல் பணியைத் திறம்படச் செய்து தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர் முன்னேற்றத்திற்கும் தொண்டாற்றி வந்துள்ளது.

**துணைநூல் பட்டியல்**


1. செந்தமிழ்ச் செல்வி இதழ், ஜீன்-2007 ப. 396.
2. மேலது ப. 400.
3. சுற்றுச்சூழல் விழிப்புணர்வும் மாசுக்கட்டுப்பாடும், ப. 15.
4. மேலது, செப்டம்பர்-2004 ப. 07.
5. பா. வீரமணி, செந்தமிழ்ச்செல்வி இதழ், மே-2005 ப. 333.
6. செந்தமிழ்ச்செல்வி இதழ் சூன்-2001 ப. 367.
7. மேலது, அக்டோபர்-2003 ப. 51.
8. மேலது, பிப்ரவரி-2001 ப. 222.
9. மா. நன்னன், பெரியார் கணினி(தொகுதி-2) ப. 52.




பதிப்பு அலைவரிசை